# விற்பனை அறிவிப்பு

**பின்புலம்**

மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தின் 22.01.2024 தேதிய உத்தரவுக்கிணங்க, மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தால், இதன் கீழ்க்குறிப்பிட்ட அடமான சொத்துக்களை விற்க ஏலம் நடத்தி அதில் பெறப்பட்ட தொகையை நீதிமன்றத்தின் பதிவகத்தில் வைப்பீடு செய்ய, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் **(LICI)** க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. **LICI** ஆனது, மொத்த விலைத்தொகையும் **LICI** ன் வங்கி கணக்கில் வரப்பெற்ற பிறகு, வெற்றி பெற்ற ஏலதாரருக்கு விற்பனை சான்றை வழங்கும். **LICI** ஆனது, மேற்சொன்ன சொத்து மீதுள்ள அதன் முதல் மற்றும் பிரத்யேக கடன் பொறுப்பை விடுவித்து, அச்சொத்துக்கான விற்பனை ஆவணத்தை வெற்றி பெற்ற ஏலதாரர் பெயரில் பதிவு செய்து கொடுக்கும்.

விருப்பமுள்ள நபர்கள் செயல்முறை விபரங்களை அறிந்து கொண்டு இதன் கீழ்க்குறிப்பிட்ட சொத்தை ஆய்வு செய்து கொள்ளலாம்.

**பட்டியல் சொத்து :**

| வ எண் | சொத்து விபரம் | பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | **அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள ப்ளாட் எண். 39**<br>தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, அம்பத்தூர் கிராமம், சர்வே எண்கள். 76/1 பகுதி, 76/2 பகுதி, 79/1 பகுதி, 79/2 பகுதி, 80 பகுதி, 107 பகுதி, 117 பகுதி, 118 பகுதி, 119 பகுதி, 120 பகுதி மற்றும் 124 பகுதி மற்றும் தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், பட்டரவாக்கம் கிராமம், சர்வே எண்கள். 231 பகுதி, 232 பகுதி, 234 பகுதி, 235, 236 பகுதி, 237/1B பகுதி, 237/2, 240 பகுதி மற்றும் 241 பகுதி ஆகியவற்றில் அமையப்பெற்ற அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள ப்ளாட் எண். 39 (வடக்கு பாகம்) என்ற இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். மின் வாரிய சாலைக்கு (60 அடி அகலம்) – வடக்கு, ப்ளாட் எண்கள். 40 (வடக்கு பாகம்) & 42 (வடக்கு பாகம்) க்கு - தெற்கு, ப்ளாட் எண். 52 (வடக்கு பாகம்) க்கு - கிழக்கு, தொலைதொடர்பு துறை சாலைக்கு (120 அடி அகலம்) – மேற்கு., இது, தமிழ்நாடு, அம்பத்தூர் சார்பதிவு மாவட்டம், வட சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. | 10.87 |
| 2 | **அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள ப்ளாட் எண். 40**<br>தமிழ்நாடு, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தாலுக்கா, அம்பத்தூர் கிராமம், சர்வே எண்கள். 78 பகுதி, 80 பகுதி, 107 பகுதி, 112 பகுதி, 114 பகுதி, 115 பகுதி, 116 பகுதி, 117 பகுதி மற்றும் 118 பகுதி ஆகியவற்றில் அமையப்பெற்ற அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள ப்ளாட் எண். 40 (வடக்கு பாகம்) என்ற இடம் மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். ப்ளாட் எண்கள். 39 (வடக்கு பாகம்) க்கு – வடக்கு, ப்ளாட் எண்கள். 40A (வடக்கு பாகம்) க்கு - தெற்கு, ப்ளாட் எண். 42 (வடக்கு பாகம்) க்கு - கிழக்கு, 120 அடி அகல சாலைக்கு – மேற்கு., இது, தமிழ்நாடு, அம்பத்தூர் சார்பதிவு மாவட்டம், வட சென்னை பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது. | 3.19 |
| | **மொத்தம்** | **14.06** |

**விற்பனைக்கான நிபந்தனைகள் :**

**இந்த விளம்பரத்தில் கண்டுள்ள விற்பனைக்கான நிபந்தனைகளை, வலைதளம் https://licindia.in/web/guest/tenders ல் கிடைக்கப்பெறும் 06.03.2024 தேதிய மின்னணு ஏல செயல்முறை ஆவணத்துடன் சேர்ந்து படிக்கவும்.**

| | |
|---|---|
| **அடிப்படை விலை** | **ரூ. 295,23,37,234/-** (ரூபாய். இருநூற்று தொண்ணூற்று ஐந்து கோடியே இருபத்து மூன்று இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து இருநூற்று முப்பத்து நான்கு மட்டும்)<br>ஏலதாரர்கள், மின்னணு ஏலத்தின் போது, அடிப்படை விலைக்கு அதிகமான தங்களது விலைப்புள்ளிகளை **ரூ. 25,00,000/- (ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்)** என்ற மடங்கில் சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுவர். |
| **விருப்ப வெளிப்பாடு சமர்ப்பிப்பு**<br>விருப்ப வெளிப்பாடு (EoI) பங்கேற்புக்கான வேண்டுகோள் கடிதம், KYC ஆவணங்கள் சமர்ப்பிப்பதற்கான தேதி மற்றும் நேரம் | **13.03.2024 மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பு**<br>**மின்னஞ்சல் அனுப்பப்பட வேண்டிய முகவரி -**<br>**auctionassist@bdo.in மற்றும் co_inv.mo.auction@licindia.com** |
| **தகுதி விபரங்களாவன** | உத்தேச ஏலதாரர் தனிநபராகவோ / பங்குதாரர் நிறுவனமாகவோ / நிறுவனமாகவோ / **ARC / 31.03.2023** அன்று நிகர மதிப்பு ரூ. 50 கோடி கொண்ட நிதி அல்லது சமீபத்தில் பெறப்பட்ட நிதியங்களாகவோ இருக்கலாம். தயாராக இருக்கின்ற நிதிகளை வங்கி கணக்கு / இசைவளிப்பு கடிதம் / பரஸ்பர நிதி அறிக்கை / பட்டய கணக்காளர் சான்று மூலம் நிரூபிக்கப்பட்டதாகவும், அவர்களது விருப்ப வெளிப்பாட்டுடன் கூடியதாகவும், திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டத்தின் பிரிவு 29A ல் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாகவும் இருக்க வேண்டும். |
| **டேவணித்தொகை (திரும்ப பெறத்தக்கது) (வட்டியின்றி)** | **ரூ. 29,52,34,000/-** (ரூபாய். இருபத்து ஒன்பது கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து நான்காயிரம் மட்டும்)<br>டேவணித்தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது. டேவணித்தொகையை RTGS / NEFT மூலம் LICI ன் வங்கி கணக்குக்கு செலுத்தப்பட வேண்டும். |
| **சொத்து ஆய்வு தேதி** | 22.03.2024 காலை 08.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை |
| **டேவணித்தொகை சமர்ப்பிக்க கடைசி தேதி** | 13.03.2024 மாலை 06.00 மணி வரை |
| **மின்னணு ஏல தேதி** | **நாள் 1** – அதாவது 02.04.2024 காலை 11.00 மணி முதல் **நாள் 2 -** அதாவது 03.04.2024 மாலை 04.00 மணி (இந்திய நேரப்படி) (மின்னணு ஏலம் நீட்டிக்கப்பட்டால், ஒவ்வொரு முறையும் நீட்டிக்கப்படும் 30 நிமிட நேரம் நீங்கலாக, **நாள் 2 ல்** கடைசி 15 நிமிடத்தில் விலை கோரப்பட்டால், இரண்டு மணி நேரம் நீட்டிக்கப்படும்., அவ்வாறு மாலை 06.00 மணிக்கு இறுதியாக முடிக்கப்படும்.) (இந்திய நேரப்படி) (இந்திய நேரப்படி)<br>மின்னணு ஏலமானது (நீட்டிக்கப்பட்ட அனைத்து நேரங்களும் உட்பட) **நாள் 2** அதாவது 03.04.2024 அன்று மாலை 06.00 மணி (இந்திய நேரப்படி) முடிக்கப்படும். |
| **விற்பனை விலைத் தொகையில் மீதி தொகையை செலுத்துவதற்கான தேதி** | 08.04.2024 அன்று RTGS / NEFT மூலம் LICI ஆல் கொடுக்கப்பட்ட அதன் வங்கி கணக்கில் மட்டும் |
| **விற்பனைக்கான நிபந்தனை** | 06.03.2024 தேதிய மின்னணு ஏல செயல்முறை ஆவணத்தை பார்வையிடவும். விருப்பமுள்ள அனைத்து நபர்களும் தங்களை மின்னணு ஏல செயல்முறை ஆவணத்துடன் (https://licindia.in/web/guest/tenders ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது) பழக்கப்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். |
| **ஏலம் விடுபவருக்கு தெரிந்த வில்லங்கம்** | **குறிப்பு -** விருப்பமுள்ள நபர்கள் தங்களது சுய சிரத்தையுடன் சொத்துக்கள் மீதான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மின்னணு ஏல செயல்முறை ஆவணத்தை பார்வையிடவும். |
| **மின்னணு ஏல சேவைதாரர்** | Auction Tiger |
| **மின்னணு ஏல தளம்** | https://ncltauction.auctiontiger.net |
| **மின்னணு ஏலம் தொடர்பான இதர விபரங்கள்** | மின்னணு ஏல செயல்முறை ஆவணத்தை பார்வையிடவும். |
| **ஏலத்தின் இதர விபரங்களாவன** | விற்பனை செயல்முறைக்கான விபரங்களாவன (கால வரையறை மற்றும் நடவடிக்கைகள் உள்பட) https://licindia.in/web/guest/tenders ல் கிடைக்கப்பெறும் 06.03.2024 தேதிய மின்னணு ஏல செயல்முறை ஆவணத்தில் கொடுக்கப் பட்டுள்ளன. **ஏதேனும் இதர விசாரணைகள் மற்றும் உதவிகளுக்கு, உத்தேச ஏலதாரர்கள் மின்னஞ்சல் முகவரிகள் -** auctionassist@bdo.in co_inv.mo.auction@licindia.com யை தொடர்பு கொள்ளலாம். |

**விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன :–**

1. ஏல விற்பனையானது **"ஆன்லைன் மின்னணு விலைகோரல்"** வாயிலாக வலைதளம் **https://ncltauction.auctiontiger.net** மூலம் இதன் மேற்குறிப்பிட்ட அட்டவணையில் கண்ட தேதி மற்றும் நேரத்தில் நடைபெறும்.
2. விருப்பமுள்ள ஏலதாரர்கள் தங்களை வலைதளத்தில் பதிவு செய்து கொண்டு, மின்னணு விலைகோரலுக்கு கட்டாயம் தேவைப்படும் பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.
3. வாங்க விருப்பமுள்ளோர் / ஏலதாரர் டேவணித்தொகைக்கான தொகையை RTGS / NEFT மூலம் மின்னணு ஏல செயல்முறை ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின் படி செலுத்த வேண்டும். டேவணித்தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
4. நிரப்பப்படாத விலைப்புள்ளிகள் அல்லது கடைசி தேதிக்கு பிறகு பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மதிப்பற்ற விலைப்புள்ளிகளாகவே கருதப்படுவதோடு அவை நிராகரிக்கப்படும். ஒரு முறை ஏலதாரரால், மின்னணு ஏல விலைகோரல் மற்றும் டேவணித்தொகை சமர்ப்பிக்கப்பட்டு விட்டால், அதனை திரும்ப பெற இயலாது. வெற்றி பெறாத ஏலதாரரால் செலுத்தப்பட டேவணித்தொகை வட்டியின்றி திருப்பி தரப்படும்.
5. விலைத்தொகையானது அடிப்படை விலைக்கு அதிகமானதாக இருப்பதோடு, ரூ. 25,00,000/- (ரூபாய். இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) என்ற மடங்கிலான அதிகரிப்பு தொகையுடன் வேண்டும்., மேலும் ஏலதாரர் மேலும் தமது விலைப்புள்ளிகளை ரூ. 25,00,000/- (ரூபாய். இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) என்ற மடங்கில் அதிகரிக்க வேண்டும். சொத்து அடிப்படை விலைக்கு குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது.
6. விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதலின் பேரில், அதிகாரப்பூர்வ அலுவலர், முழு விலைத்தொகையையும் LICI ன் வங்கி கணக்கில் வரப்பெற்ற பிறகு, அதிகபட்ச விலைப்புள்ளி கோரிய ஏலதாரர் பெயரில் "விற்பனை சான்றை" வழங்குவார். LICI ஆனது மேற்சொன்ன சொத்து மீதுள்ள அதன் முதல் மற்றும் பிரத்யேக கடன் பொறுப்பை விடுவித்து, வெற்றி பெற்ற ஏலதாரரின் பெயரில் விற்பனை ஆவணத்தை செயலுறுத்தி வழங்கும்.
7. ஆவணப்பதுத்துவதற்கான அனைத்து செலவுகள் அதாவது விற்பனை ஆவண தயாரிப்பு மட்டுமல்லாது, முத்திரை தீர்வை, பதிவு கட்டணங்கள், பரிமாற்ற கட்டணம், நகராட்சி நிலுவைகள், வளர்ச்சி குழும நிலுவைகள், சிப்காட் நிலுவைகள், TDS, TCS, இதர கட்டணங்கள் மற்றும் ஏதேனும் இதர வில்லங்கங்கள் இருப்பின் அதனை நீக்க அல்லது சொத்துரிமை / உரிமை மீதான ஏதேனும் பிழை இருப்பின் அதனை சரி செய்வதற்கான இதர கட்டணங்கள் உட்பட அனைத்தையும் வாங்குபவரே / வெற்றி பெற்ற ஏலதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. உள்ளாட்சி அல்லது மத்திய அல்லது இதர சட்ட அமலாக்க அமைப்பிடமிருந்து, ஏலத்துக்குட்பட்ட சொத்து தொடர்பாக அல்லது இதர நிலுவைகளை செலுத்துதல் மட்டுமல்லாது தண்ணீர் / மின் கட்டண நிலுவைகள், சொத்து வரி அல்லது இதர கட்டணங்கள், ஒழுங்காற்று முறை நிலுவைகள் ஏதேனும் இருப்பின் அவற்றுக்காக ஏதேனும் அதிகாரியிடமிருந்து தடையின்மை சான்று பெற வேண்டியிருப்பின் அதற்காகவோ LICI மற்றும் / அல்லது அதன் அறிவுரையாளர்கள் மற்றும் / அல்லது LICI ன் பிரதிநிதிகள் அனுமதி பெறுவதற்கான எந்த பொறுப்பையும் எடுத்துக்கொள்ள மாட்டார்கள்.
9. LICI ன் அதிகாரப்பூர்வ அலுவலர் அனைத்து விலைப்புள்ளிகள் / விலைகோரல்களையும் ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை எக்காரணமும் கூறாமல் ஒத்தி வைக்க / ரத்து செய்ய / மாற்றியமைக்க அல்லது விற்பனைக்கான நிபந்தனைகளை எந்த முன்னறிவிப்புமின்றி மாற்ற உண்டான முழு உரிமை மற்றும் சுய அதிகாரத்தை கொண்டுள்ளவராவார். மேற்சொன்ன சொத்து அதிகாரப்பூர்வ அலுவலரின் உய அதிகார வரம்புக்கு கட்டுப்பட்டு, வெற்றி பெற்ற ஏலதாருக்கே விற்பனை செய்யப்படும்.
10. விருப்பமுள்ள ஏலதாரர்கள், தம்மளவில் திருப்தி ஏற்படுமளவுக்கு சுய சிரத்தையுடன் சொத்து மீதான சுய கணக்கீடுகளை மேற்கொண்டிருக்க வேண்டும். LICI மற்றும் / அல்லது அதன் அறிவுரையாளர்களோ இதன் மேற்குறிப்பிட்ட சொத்து தொடர்பாக ஏதேனும் கடன் பொறுப்போ, கடனீடோ, இதர வில்லங்கங்களோ, அரசு அல்லது இதர அமைப்புக்களுக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி அல்லது இதர நிலுவைகளோ இருப்பின் அதற்கு எந்த விதத்திலும் ஜாமீனோ அல்லது பிரதிநிதித்துவத்தையோ வழங்குவதில்லை.
11. சொத்து "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். விருப்பமுள்ள ஏலதாரர், தமது சுய நிலையிலும், அபாய நேர்விலும், சொத்து மீதான சொத்துரிமை / சந்தைப்படுத்தும் தன்மை / உரிமைத்தன்மை, வில்லங்கம் (ஏதேனும் இருப்பின்) விற்பனைக்கு விடப்பட்டுள்ள சொத்து மீதான விருப்புரிமை, கடன் பொறுப்பு, செயல்முறைகள், பற்றுகை ஆகியவற்றை பொறுத்து விசாரணைகளை மேற்கொண்டு தம்மளவில் சொத்துரிமை, பரப்பு, தன்மை மற்றும் எண்ணிக்கை ஆகியவற்றை பொறுத்து திருப்தி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். LICI மற்றும் / அல்லது LICI ன் அறிவுரையாளர்(கள்) மற்றும் / அல்லது பிரதிநிதி(கள்) யாவரும் ஏதேனும் வில்லங்க(ங்கள்) மற்றும் / அல்லது இழப்புகள் அல்லது வெளியேற்று செயல்முறைகள் (ஏதேனும் இருப்பின்) அதற்கு பொறுப்பல்ல. விருப்பமுள்ள ஏலதாரர்கள், இது தொடர்பாக, LICI மற்றும் / அல்லது LICI ன் அறிவுரையாளர்(கள்) மற்றும் / அல்லது பிரதிநிதிகளுக்கு இழப்பெதிர் காப்பு செய்து கொடுக்க வேண்டும்.
12. இந்த விற்பனை அறிவிப்பு பிரசுரத்தின் ஆங்கிலம் மற்றும் இதர வட்டார மொழி செய்தித்தாள்களின் பதிப்புகளுக்கிடையில் ஏதேனும் முரண் இருப்பின், இதர வட்டா மொழி செய்தித்தாளில் உள்ள விபரங்களை விட ஆங்கில செய்தித்தாளில் உள்ள விபரங்களே இறுதியானவை., மேலும், குழப்பங்களை தவிர்க்க, அதுவே இறுதி நகல் என கருதப்பட வேண்டும்.
13. விற்பனையானது மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டே நடைபெறும். LICI மற்றும் / அல்லது LICI ன் அறிவுரையாளர்(கள்) மற்றும் / அல்லது பிரதிநிதிகளோ, ஆன்லைன் விலைப்புள்ளிகளை சமர்ப்பிக்கும் போதோ / மின்னணு ஏலத்தில் பங்கேற்கும் போதோ, ஏதேனும் நெட்வொர்க் தொடர்பிழப்பு பிரச்சினை, கணிப்பொறி செயலிழப்பு மற்றும் மின் பிரச்சினை அல்லது இதர நிகழ்வுகள் ஏற்பட்டு, அது விலைப்புள்ளி சமர்ப்பித்தலில் ஏதேனும் ஏற்றத்தாழ்வு அல்லது வாக்கு வாதத்துக்கு வழி வகுக்குமாயின் அதற்கு பொறுப்பல்ல.

**தேதி - 06 மார்ச் 2024**

**இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்-க்காக மற்றும் சார்பில்**

**திரு K. ஸ்ரீநாத்**

**மின்னஞ்சல் - co_inv.mo.auction@licindia.com auctionassist@bdo.in**